# தெருப்புலவர் சுவர்க்கவிகள்

664

JPL
C664

உணர்ச்சிக் கவிஞ
காசி ஆனந்த

சுதந்திரன் வெளியீடு ②

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




KOHA
JPL

77219

# தெருப்புலவர் சுவர்க்கவிகள்

— காசி ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : 1. 1. 1975

சேர்வு எண்
வகுப்பெண் 894.8-811
77219

விலை : ஒரு ரூபா.

PUBLIC LIBRARY
JAFFNA.

அச்சிட்டு வெளியிட்டவர்கள் :
சுதந்திரன் வெளியீட்டக
194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# ஒரு சொல்.........

"தெருப்புலவர்' என் கற்பனையில் பிறந்த ஒரு தனிப் புலவர்.

நாட்டின் இழிநிலைகளை அவ்வப்போது நையாண்டி செய்து தன் மனக் குமுறலை வெளிக்கொட்டுதல் அவர் நாளாந்த வேலை.

சும்மா இருக்கமாட்டார்.

எங்காவது ஒரு கரித்துண்டைப் பொறுக்கி-ஏதாவது ஒரு சுவரில் நாலு சொற்கள் கிறுக்கி விடுவார்...அச் சொற்கள் சுவையாகவும் இருக்கும்; சூடாகவும் இருக்கும்

"கனி இலக்கியம்' படைக்கும் காசி ஆனந்தன் இப்படி 'கரி இலக்கியம்' படைக்கலாமா?' என்று யாரும் கேட்கக் கூடாது.

தமிழினத்தின் நல்வாழ்வுக்காக ஒரு கரித்துண்டைக் கூட நான் பயன்படுத்தத் தவறமாட்டேன்.

அதனால்தான்—

சுவரில் தெருப்புலவர் வரையும் இலக்கணம் எதுவு மற்ற இந்த வெறும் கிறுக்கல்களைக்கூட நான். 'சுவர்க் கவிகள்' என்று மரியாதையாக அழைக்கிறேன்.

நான் உயிரோடு உள்ளவரை என் கற்பனைப்படைப் பான தெருப் புலவர் அவ்வப்போது நற்றமிழ் இனத் தின் நலிவு தீர்க்கும் சுவர்க்கவிகளை எழுதிக்கொண்டே இருப்பார்.

தமிழ் ஈழத்தின் விடுதலையே தெருப்புலவரின் தாகம்!

—காசி ஆனந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தாள் விலை உயர்வு, தாள் தட்டுப்பாடு போன்ற பல்வேறு நெருக்கடிகள் முன்னெப் போதுமில்லாதவாறு அச்சுறுத்தும் இச்சந் தர்ப்பத்தில் — ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை நூலுருவில் வெளிக்கொண ரும் ஒரு விஷப்பரீட்சையில் நாம் இறங்கி யிருக்கிறோம். தமிழ் பேசும் மக்கள் நிச்சயம் நமக்கு கைகொடுப்பார்கள் என்கிற நம்பிக் கையுடன் நாம் இதில் ஈடுபட்டிருக்கிறோம்.

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் தன்னுடைய சுந்தரத்தமிழில் தீட்டிய தியாகி சிவகுமாரனின் வீரவரலாற்றை நூலுருவில் முதன்முதலாக வாசகர்கள் திருமுன் வைத் தோம்.

இதோ — இரண்டரை ஆண்டுகள் சிறை யிருந்துவிட்டு வெளிவந்திருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் புதிய படைப் பொன்றை நமது இரண்டாவது வெளியீடாக வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

எமது முயற்சியை கைதூக்கி விடுவது உங்கள் கைகளிலேயே இனித் தங்கி இருக் கிறது.

— **சுதந்திரன் வெளியீட்டகத்தார்**
*194 ஏ, பண்டாரநாயக்க வீதி,*
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம்

ஆச்சிசொன்னாள் : -

"அரசாங்கக் கட்சிக்கிளை
வைப்பதை விட
நாலு முருங்கைக்கிளை வை !
காய்க்கும் !
குழம்பு வைக்கலாம் !




PUBLIC LIBRARY
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோசம்

செத்த தமிழ்ப்புலவர் ஒருவர்
உயிர் பெற்று
யாழ்ப்பாணம் பிரவேசித்தார் !
தனக்குச் சிலை
இருப்பது கண்டு பூரித்தார்
'சிலைவைத்தவர் யார் ?'
என்று
விசாரித்தார்......
திரும்பவும் செத்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ! தனமே!

சீதனம் எவன்கேட்டான்?
செருப்பை எடுத்தடி!
கோவணம் கட்டிய
குப்பனை மணம் முடி!



PUBLIC LIBRARY
JAFFNA.




77219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையோ சேவை!

வடக்கிலும்
கிழக்கிலும்
அமைச்சர்களும்
வால்களும்
பாலம் கட்டவும்
பள்ளிக்கூடம் போடவும்
நாட்டிய
அத்திவாரக் கற்களில்
ஆடுகளும்
மாடுகளும்
முதுகு தேய்க்கின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பாவம்!

ஒரு மந்திரி இங்கிலாந்தில்!
ஒரு மந்திரி ஜப்பானில்!
ஒரு மந்திரி சீனுவில்!
ஒரு மந்திரி ரஷ்யாவில்!
ஒரு மந்திரி அமெரிக்காவில்!
ஒரு மந்திரி ஜெர்மனியில்!
நான் 'பாண்' கியூவில்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்காயங்கள் !


இன்று —
எங்கேயோ மந்திரிக்கு வரவேற்பாம்!'
வழக்கமாக
வெங்காயம் ஏற்றிச் செல்லும்
கூட்டுறவுச் சங்க லொறிகள்
அதோ !
சிறீலங்கா சுதந்திரக்கட்சி
ஆதரவாளர்களை
ஏற்றிச் செல்கின்றன !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ட மாற்று

சிங்களம் திணித்த
மந்திரியின் விமானம்
பலாலியில் இறங்கும்போது
தமிழர் மானம்
கப்பலேறுகிறது !






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மல சல'

அடிக்கடி என்னுடன்
பட்டணத்துக்கு வரும்
என் சின்னத்தம்பி
ஒரு முடுக்கில்
பொதுமலசல கூடத்தில்
'மலசல' கூடம்
என்று எழுதி
இருந்ததை
சுட்டிக்காட்டிக் கேட்டான் :-
"அண்ணு ! இது என்ன ?
'லக்சல' 'சலுசல'
மாதிரி ஒரு
இடமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலி

புத்திசாலி யார்?
என்று
கத்திக் கேட்டார் வாத்தியார்!
'மன்னாரில்
கள்ளக் குடியேற்றக்காரர்
தடுப்பு முகாம்
கட்டப்படுவதற்கு முன்
இலங்கைக்கு வந்த
விஜயன் சார்!'
என்று
பத்து மாணவர்
சத்தமிட்டாரே!

PUBLIC LIBRARY
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்குத் தீ!

வேளாளப் பெண்ணுக்கு
மூன்று மார்பா!
வேறேதும் புதிதாக
அங்கே உண்டா?
கீழே நான்? எவ்விதம்?
என்றாள் வள்ளி!
கிளிப்பிள்ளை சாதிக்கு
வைத்தாள் கொள்ளி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரோகி !

விடுதலை இயக்கத் தமிழ்
இளைஞர்களுக்கு
சிறைச்சாலையில்
புழுத்த பாணும்
புளித்த சம்பலும்
போடும்
அரசாங்கத்தின்
மந்திரிமார்களுக்கு
மட்டக்களப்பில்
இழிதமிழன் ஒருவன்
புறியாணிச் சோறும்
புதுத்தேனும் பாலும்
போட்டு
வரவேற்பு வைத்தானே !

PUBLIC LIBRARY
JAFFNA.



77219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவம் !

முற்போக்குப் பத்திரிகை
ஒன்றுக்கு —
'தமிழ் சோறு போடுமா ?'
என்று
தமிழில்
கட்டுரை எழுதிக் கிடைத்த
சன்மானத் தொகைக் காசோலையை
மாற்றிக்கொண்டு
ஒரு முற்போக்கு எழுத்தாளர்
சோற்றுக் கடைக்குள்
நுழைகின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தம் சரணம் கச்சாமி!

மன்னராய் இருந்தும்
அரசியலைத் துறந்த
மகாதுறவி
புத்த பகவானுக்கும்
இங்கே சிலை!
துறவியாய் இருந்தும்
அரசியலில் இறங்கி
தமிழ் உரிமை தராதே!
என
இனவெறி ஊர்வலம் போன
புத்த பிக்கு
இரத்தினசார தேரோவுக்கும்
இங்கே சிலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட் றெடி !

பலாலி விமான நிலையத்தில்
'மினி'ஸ்டர் வருகிறார்
இன்று மோர்ணிங் !
மகளே !
சீக்கிரம் வெளிக்கிடு !
உந்த 'மினி'ஸ்கேட்டை
எடுத்துப் போடு
டார்லிங் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட! தமிழா!

இமயத்தில்
வில்லும் புலியும் மீனும்
எழுதிய தமிழன்
சொந்த ஊர்ச் சுவரில்
'தமிழ் வாழ்க'!
என்று
எழுதினாலும்
பொலீஸ்காரன் துரத்துகிறானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவம்

பசிக்கொடுமையால்
            தேயிலைக்கொழுந்தை
மலையகத் தொழிலாளர்
புசிக்கின்றாராம் ...
சமத்துவம் வாழ்க !
கொழும்பிலே —
மந்திரி வீட்டு மூன்றும் மாடியில்
குரோட்டன் செடியைக் கவனிக்க
ஒரு வேலைக்காரன் !
மலைநாட்டிலே —
தொழிலாளியைக் கவனிக்க
            ஒரு தேயிலைச்செடி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜயவேவா !

எங்கள் வீட்டில்
மகளுக்கு
சிங்களம் படிப்பிக்கும்
ரியூசன் மாஸ்டர்
இரவு எட்டு மணியாகியும்
இன்னும் வரவில்லை.
'இன்று
சிங்கள மாஸ்டர் ஏன்
வரவில்லை?'
என்று
விசாரிக்க
அறையெல்லாம்
மகளைத் தேடினேன்......
மகளையும் காணவில்லை!


77219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோசலிச சுலோகங்கள் !

வடகிழக்கில்—
'தமிழர் எங்கள்
சகோதரர் அப்பா !'
தெற்கில்—
'வடே தோசே
அப்பிட்ட எப்பா !'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்கள் சமாதானமாய் வாழ!

இலங்கையில்
அடக்குமுறை
ஆட்சியின் கீழ்
தமிழர்
துடியாய்த் துடிக்கின்றனரா?
உஸ்ஸ்......பேசாதே !
வா !
இந்து சமுத்திரத்தை
சமாதானப் பிராந்தியம்
ஆக்குவோம் !

PUBLIC LIBRARY
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைத்தானே !

அம்பாறை
தொழில் நுட்பக்கல்லூரியில்
தமிழனுக்குப் பெயர்
கால் பந்து !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக்கை !

வயிறு பசிக்குதென்ருல்
'கிழங்கைத் தின்னுங்கள் !'
என்ருேர்
அறிக்கை !
கொதித்தெழுந்து கூட்டம்
போடுவோ மென்ருல்
'கைதுசெய்வோம்! என்ருேர்
எச்சரிக்கை!
எழுத்தால் எதிர்ப்போமென்ருல்
பத்திரிகைத் தணிக்கை!
அப்பப்பா ! என்ன வாழ்க்கை!
கைக்கு வாக்களித்த கையால்
தலையைச் சொறிகிறேன்—
நானோர் உலக்கை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமன் எத்தனை ராமனடி !

இராவணன் மட்டுமா தமிழன்?
இல்லை—
ராமனும் தமிழனே!
எந்த ராமன் ?
தசரத ராமனா ?
கோசல ராமனா ?
சீதா ராமனா ?
கோதண்ட ராமனா ?
ஸ்ரீ ஜெய ராமனா ?
இல்லை ஐயா இல்லை!
தமிழினத்தைக் காட்டிக்கொடுத்து
சிங்கள ஏகாதிபத்தியம் போடும்
எச்சிலைக் கூடச் சாப்பிடுகிறானே !
அவன்தான்
அந்தச் சாப்பாட்டு......... !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரப்படுத்தல்

பொன்னி அக்காவை விட
பொடி மெனிக்கா
சரியான மொக்கு !
பல்கலைக் கழகத்தெரிவில்
பொன்னி அக்காவுக்கு
201 மார்க்ஸ்
பொடி மெனிக்காவுக்கு
181 மார்க்ஸ்
ஆனால்
பொன்னி அக்கா பெயில் !
பொடி மெனிக்கா பாஸ் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உரிமை

வெட்டுதற்கு நாலு மாடுகள்
கட்டி அனுப்பச் சொல்லி
மாட்டிறைச்சிக் கடைக்காரன்
நண்பனுக்கு
கடிதம் எழுதி உறையில்
இட்ட பின்னர்............
தமிழருக்குக் கிடைத்த
'மாபெரும் தமிழுரிமையாம்'
நாவலர் முத்திரையை
ஒட்டி அனுப்புகிறான்.........
அருமை! அருமை!
தமிழர் உரிமை !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதினங்கள் !

'அந்நியனின் இங்கிலீஸ்
வேண்டாம் !
சிங்களம் வேண்டும் !
எனக் கத்திய
சிங்களவன்
தேசியவாதி !
'அடுத்தவனின் சிங்களம்
வேண்டாம் !
தமிழ் வேண்டும் !
எனக்கத்தும்
தமிழன்
வகுப்புவாதி !
புதினங்கள்—
இத்தியாதி! இத்தியாதி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவாததுகள் !

சொத்தை நாகரீகத்தில்
ஊர்சுற்றும் இளைஞனின்
சோடிக்காற் சட்டையும் கோட்டும்
கத்தரித் தோட்டத்து
வெருளிக்குப் போட்டாலும்
காய் நாலு சாப்பிடத்தேறும்!
கால் வயிற்றுப் பசி ஆறும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடி சக்கை!

‘வன்முறை’ கூடாதென்று
யாழ்ப்பாணத்தில்
பன்முறை எடுத்துக்கூறும்
அரசாங்கக் கூட்டங்களில்
‘வாள்’ தாங்கிய சிங்கக்கொடி
வானளாவப் பறக்குதாம்......
தில்லாலங்கடியோ !—ஏ
தில்லாலங்கடியோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன்? ஏன்? ஏன்?

சிங்களச் சோதனை
பாஸ் பண்ணிய பின்பும்
ஆபீசில்
கிளாக்கர் சில்வாவுக்கு
கிளாக்கர் சின்னையா
கிடுகிடு நடுக்கம்!

PUBLIC LIBRARY
JAFFNA.

77219



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூசு துடைக்கவந்த காசி!

தமிழ்ச் சமுதாயத்தினை இன்று மூடியுள்ள அடிமைத்தனம் எனும் தூசு தட்டி—சாதி மதபிரதேசப் பூசல்களாம் மாசு துடைத்து—தமிழ்த்தேசம் அமைக்கப்புறப்பட்டுள்ள தமிழ் ஈழத்தின் வரவு—நம்முடைய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்.

இந்திய சுதந்திரத்துக்கு ஒரு பாரதிபோல — பாகிஸ்தான் விடுதலைக்கு ஒரு இக்பால் போல — திராவிட இயக்கத்துக்கு ஒரு பாரதி தாசன் போல—நம் தமிழ் ஈழத்துக்கு ஒரு காசி ஆனந்தனை தெய்வம் நமக்குத் தந்திருக்கிறது.

தாயக விடுதலைக்காக — தமிழ் மொழியின் வாழ்வுக்காக — இதுவரை எந்த ஒரு தமிழ்க் கவிஞனும் தன்னுடைய பதவியை உதறியெறிந்ததாகவோ — சிறை சென்றதாகவோ வரலாறு இல்லை. கவிஞர் காசி ஆனந்தனே இப் புதிய வரலாற்றின் நாயகனாக இன்று நம்மிடையே வாழ்கிறார்!

அவர் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பதில் பெருமை படைவோம்! இரண்டரை ஆண்டு சிறை வாழ்வுக்குப்பின் "ஒரு செங்களமாடி வரும்புகழோடு சிரித்து வரும்" கவிஞரின் இப் புதிய படைப்பு தமிழ் ஈழ விடுதலைப் படையினருக்கு மற்றோர் கருவியாகட்டும்!

— கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org